முன்னாள் அதிபர் அமரர் திரு P.இராமச்சந்திரா அவர்களின் (1930-1949) சேவை நினைவாக...

# சாரல்

இதழ் - 03

ஆனித்திங்கள் 2011
வள்ளுவர் ஆண்டு 2043

OBA அரையாண்டுச் செய்திமடல்

பழைய மாணவர் சங்கம்
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

## வாழ்த்துச் செய்தி



தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சாரல் - அன்னார் வெளியிடும் அரையாண்டுச் சேதிமடலில் 3 வது இதழ் வாழ்த்துச் செய்தி வழங்கவென விடுத்த வேண்டுகோளை மனநிறைவுடன் ஏற்று இதனை வரைகிறேன். நூறு ஆண்டுகட்கும் மேலாக வரலாறு படைத்தது தி /இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி. எனவே இதன் பழைய மாணவர்கள் நம் நாட்டிலும், புலம் பெயர்ந்தும் வாழ்கின்றனர். இவர்களை ஒன்றிணைத்து கல்லூரியின் ஆக்க பூர்வமான செயற்பாடுகளுக்கு உந்து விசையாகப் பரிணமித்துள்ளது இக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம்.

கற்ற கல்வி, பெற்றுத் தந்த பட்டம், பதவிகளால் நன்மதிப்புடன் வாழும் நமது இளைய தலைமுறை. இன்று கற்ற கல்லூரியை நினைவு கூர்ந்து சேவையாற்றுவது கண்டு பெருமிதம் அடைகிறேன்.

"சாரல்" இந்தச் சேதிமடல் அவர் தம் சேவைக்கு ஓர் குறிகாட்டியாகிறது. உயர் தேர்ச்சி மட்டங்கள், சாரல் வழி வெளிக் கொணரப்படுவது சிறப்பம்சமாகும். புனிதர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் பாதத்தூளி பட்ட மண்ணில் நிமிர்ந்து நிற்கும் நமது கல்லூரி, வளமிகு மாணவச் செல்வங்களை உருவாக்கி வான்புகழ் கொண்டு வாழ்கவென வாழ்த்தி நிற்கிறேன். இந்த அரும் பணிக்கு பழைய மாணவர் சங்கம் உதவும் கரங்களாகத் திகழ வேண்டும்.

"சாரல்" - எனும் நாமத்துடன் அரும்பிய சேதிமடல் மற்றொன்றில் சார்ந்ததாயன்றி மலையாகப் பரிணமித்து, பயன் நல்கிட மனம் நிறைத்து, கோணேசப் பெருமானை நினைந்து பணிந்து வாழ்த்தி அமைகிறேன்.

அ.சிவலோகநாதன்
(முன்னாள் அதிபர்)
தபால் பெட்டி இல.1604
காபறோன் பொற்ஸ்வானா.

### தூரநோக்கு

ஒழுக்க விழுமியங்களிலும், கல்வியிலும், மொழியியல் தேர்ச்சியிலும், இணைப்பாடவிதானங்களிலும் சாதனை படைக்கும் ஒரு முன்மாதிரியான கல்லூரி.

### நோக்கு

கல்லூரியின் அடைவுகளை உச்சப்படுத்துவதற்கும், தேவையான வளங்களைத் தேடிக் கொள்வதற்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பழைய மாணவர்களினதும், வளவாளர்களினதும் பங்களிப்புடன் கூடிய சேவை அர்ப்பணிப்பு

### Vision

"An exemplary College in creating best records in discipline, education, Lingual proficiency and co-curricular activities."

### Mission

"Dedication of Service with the contribution of the resource persons and the old students living in inland and abroad for Obtaining the required resources and Maximizing the achievements of the college"

வெளியீடு : OBA, Trinco, Hindu.
E-mail : oba@trincohindu.sch.lk
Web : www.trincohindu.sch.lk/oba/index.htm

ஆலோசகர் : திரு.இ.புவனேந்திரன்
பதிப்பாசிரியர் : திரு.ச.பாரதிநாதன்
உதவி பதிப்பாசிரியர் : திரு.ச.சிறிதரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபர் திரு. P. இராமச்சந்திரா.... ஓர் அசை மீட்டல்

கற்றுணர் ஞானசம்பந்தப் பெருமானின் உற்ற செந்தமிழால் பாடல் பெற்ற திருத்தலம் திருக்கோணேஸ்வரம். வடக்கே குன்றின் மேல் கொலுவீற்றிருக்கும் செஞ்சடை கடவுளின் அருள் வீச்சிலே, மேற்கே தாயினும் நல்ல தலைவி பத்திரகாளி அம்பாளின் அருட் பார்வையிலே, ஆலடி விநாயகரின் அரவணைப்பிலே ஆல்போல் வேரூண்டி அரசுபோல் தழைத்து மிளிரும் பாடசாலை இந்துக் கல்லூரியாகும். வாழையடி வாழையென வந்த திருக்கூட்டமாம் அறிவுசால், ஆளுமைசால் கல்விமான்களை அதிபர்களாகக் கொண்டு கல்விச் செல்வத்தை வற்றாத ஜீவ நதியாக வழங்கிவரும் கலங்கரை விளக்கம் இந்துக்கல்லூரி என்றால் எல்லோருக்குமே வெளிச்சம்.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளாரை முழுமுதல் அதிபராகக் கொண்டமை இந்துக் கல்லூரிக்கு கிடைத்தற்கரிய தவப்பேறாகும். இந்த வரலாற்றுச் சிறப்பு காலத்தால் என்றுமே அழியாத அமரத்துவம் பெற்றுவிட்டது. ஆன்மீகம், இயல், இசை, நாடகம், சமூக சேவை ஆகிய பல்வேறு துறைகளில் மூழ்கிக் கிடந்த அடிகளாரால் கல்விச் சேவையில் நீடித்து நிலைத்து நிற்க முடியாமல் போய்விட்டது நமது துரதிஷ்டமாகும்.

உள்ளூரிலும், வெளிநாட்டிலும் நல்லதோர் அதிபருக்காக அடிகளார் தேடி அலைந்தார். இராமகிருஷ்ண சங்கத்தின் உதவியோடு தென்னிந்தியாவை சேர்ந்த உயர்குல பிராமண வம்சத்தில் M.A முதுமானிப் பட்டம் பெற்றவரும், ஒழுக்க சீலருமான திரு. P. இராமச்சந்திரா என்னும் கல்விமானை கண்டெடுத்தார். 1930ம் ஆண்டுப் பகுதியில் திரு. இராமச்சந்திரா இந்துக்கல்லூரியின் இரண்டாவது அதிபராக கடமையாற்றத் தலைப்பட்டார். கல்லூரியில் அவர் கடமையாற்ற ஆரம்பித்த காலம் மிகவும் கஷ்டமான காலமாகும்.

அதிபர் இராமச்சந்திரா சுமார் 5 அடி 8 அங்குலம் உயரம் கொண்ட கவர்ச்சியான, கம்பீரமான தோற்றம் உடையவர். நிமிர்ந்த உருவமும், நேரிய பார்வையும், பரந்த நெற்றியும், பார்வையில் கடினமும், குழப்பாது வாரிவளித்து இழுத்த கேசமும், மௌனராகமான பேச்சும், அசைவுகள் அற்ற அமைதியான நடையையும் கொண்டவர். பாடசாலைக்கு நித்தநித்தம் குழம்பாத கோட் சூட்டுடன் வருகை தருவார். பெரும்பாலும் அவர் அணிந்து வரும் கோட் சூட்டுகள் கடும் சந்தன நிறமான ரசூர் துணியில் ஆனதாகும். பாடசாலைக்கு வேளையோடு வருகை தரும் முதல் பறவை அவரேதான். அவரது கவர்ச்சியான கம்பீரமான தோற்றத்திற்கு மாணவர் சமூகத்தில் ஒரு தனி மதிப்பும், மரியாதையும் காணப்பட்டது. சில வகுப்புகளுக்கு ஆங்கில மொழி பாடம் எடுப்பார். எல்லோருடனும் மனம் திறந்து அன்போடு ஆங்கில மொழியில் பேசுவார். ஆங்கில உச்சரிப்பில் ஒரு தனி அழகு இளையோடும். அவரது ஆங்கில பிரசங்கங்கள் கேட்போரை மெய்மறந்து லயிப்பில் ஆழ்த்த வல்லன. அன்றைய ஆசிரியர்கள் கைகளை, நீங்கா நிழல் போல நீண்ட பிரம்புகள் அலங்கரிக்கும். அதிபரோ சுட்டு விரலாலும், பெருவிரலாலும் தவறிழைத்த மாணவர்களின் சொக்கையை கிள்ளி இழுத்து, நான்கு விரல் நுனிகளால் பட்டென்று கன்னத்தில் அறை கொடுத்து STUPID என்று சொல்வார். இதுதான் அவர் வழங்கும் கடினமான தண்டனையாகும்.

சைவத்திலும், தமிழ் பண்பாட்டிலும் அதீத அக்கறை காட்டும் அதிபரின் நடை, உடை, பாவனை எல்லாமே ஆங்கில பாணியில் இருந்தமை அபூர்வமாகும்.

அதிபரின் காலப்பகுதியில் பல தரப்பட்ட பிரச்சனைகள் காணப்பட்டன. இரண்டாவது உலக யுத்த மேகம் எமது முகட்டின் மீதும் இருந்தது. எதிரிகள் (ஜப்பானியர்) எமது ஊரை தாக்க வரப்போவதை அறிவிக்க அபாயச் சங்குகளை ஓ வென்று ஒலிக்க வைப்பார்கள். அவ்வேளையில் மாணவர்கள் ஒரு பென்சிலை கடவாயில் கடித்த வண்ணம் நிலத்தில் குப்புற படுத்தல் வேண்டும். அன்றேல் பதுங்கு குழியில் பதுங்குதல் வேண்டும். ஆசிரியர்கள் தலையில் கவசம் அணிந்து A.R.P காவலர் கடமைக்கு சென்று விடுவார்கள். பின்னர் அபாயம் நீங்கிவிட்டதை அறியத்தர அபாயச்சங்கு விட்டு... விட்டு ஒலிக்கும். அதன் பின்பே நிலைமை வழமைக்குத் திரும்பும். இது புறக்காரணம், அகக்காரணங்களாக மாணவர்களின் ஒழுக்காற்று குறைவினால் உருவாகும் பிரச்சனைகள், பெற்றோரின் தலையீடுகள், ஆசிரியர்களின் தடம் புரண்ட முகாமைத்துவம் இவ்வாறான பிரச்சனைகள் காணப்பட்டன.

இக்கட்டான இவ்வேளைகளில் உணர்ச்சிவசப்படாமல், பொறுமையோடு, நிதானமாகச் சிந்தித்து தனக்கே உரிய ஆளுமைத் திறனால் இவைகட்கு ஈடு கொடுத்து எதிர்கொண்டு செப்பனிட்டு சிறந்த எதிர்காலத்திற்கு வழிசமைத்த திரு இராமச்சந்திரா கல்லூரி வரலாற்றில் மறக்க முடியாத அதிபராவார்.

கல்லூரியின் மேற்பிரிவு வகுப்புகளை வளப்படுத்த பட்டதாரி ஆசிரியர்கள் அற்ற நிலையை கண்டு கவலைப்பட்டார். தென்னிந்தியா சென்று கணிதம், விஞ்ஞானம், உயிரியல் பாடங்களை கற்பிக்க முறையே திரு. மதனகோபால், திரு. கண்ணன், திரு. நாயர் ஆகிய அனுபவ பட்டதாரிகளை கல்லூரியில் இணைத்துக் கொண்டார். வகுப்பறையில் இவ்வாசிரியர்கள் கற்பிப்பதை மாணவர்களுடன் இருந்து பாடசாலை பரீட்சகர்கள் அவதானிப்பார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் வருகையின் பின் மேற்பிரிவு படிப்பிற்காக வெளி மாகாணங்களுக்கு செல்லும் வசதி படைத்த மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தது. எனினும், அதிபரின் உணர்வுபூர்வமான அர்ப்பணிப்பிற்கு நல்ல அறுவடை கிடைக்கவில்லை. அதற்கு ஏற்கக்கூடிய காரணங்களும் இருக்கத்தான் செய்தன. பெரும்பாலான மாணவர்கள் 8ம் வகுப்போடு படிப்பை நிறுத்திக் கொள்வார்கள். வசதி குறைந்த பெற்றோர்களின் எதிர்பார்ப்பும் அதுவாகவே இருந்தது. யுத்தகாலத்தில் இயங்கி வந்த பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கடற்படைத்தளத்தில் வேலைக்கு சேர்ந்துவிடுவார்கள். அதிபரின் கல்வி வித்தும், விதைப்பும் 50ம் ஆண்டுக் காலப்பகுதியிலேயே நல்ல அறுவடையை காணத் தலைப்பட்டது. அந்த அறுவடையின் சிறப்பினை கண்டு, களித்து, இன்புற அதிபர் இருக்கவில்லை. இவர் 49ம் ஆண்டுப் பகுதியில் ஓய்வு பெற்றமை ஒரு பெரிய தாற்பரியம்.

50ம் ஆண்டு காலப்பகுதியாக இருக்கலாம். முதல் முறையாக ஒரேயொரு மாணவன் H.S.C (G.C.E A/L) ல் தேர்ச்சியடைந்தான். அவரது பெயர் உமாபதி சிவம். நெற்றி நிறைய நீறு அணிந்து வரும் இவரை "சாமியார்" என்று செல்லமாக அழைத்தார்கள். வரலாறு படைத்த இம்மாணவனின் சாதனை கல்லூரியின் வரலாற்று ஏட்டினிற்கு எட்டியிருக்குமோ? கல்லூரியின் ஆரம்ப சகாப்தத்தில் அதிபர்களாக கடமையாற்றிய கல்விமான்களில் இராமச்சந்திரா ஒரு முன்னோடி.

அக்காலத்திலேயே அவர் சொல்வார்:- "ஒரு மாணவனின் முழுமையான ஆளுமை பாடங்களில் சிறப்பான பெறுபேறுகளை பெறுவதுடன் முடிந்து விடுவதில்லை. கல்விக்கப்பாலான துறைகளிலும் ஆற்றலை வளர்த்தால் தான் முழுமையான ஆளுமை உடையவனாக விளங்க முடியும்" என்றார்.

அதிபர் இராமச்சந்திராவின் தீட்சண்யமான அறிவின் சிறப்பால் அவர் ஒரு தீர்க்கதரிசனமான கல்விமான் என்பது நிரூபணமாகின்றது.

ஆக்கம் : ஆர். சுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சஞ்சிகை ஏன் "சாரல்" என நாமம் சூடிக்கொண்டது.....



முத்தமிழ் வித்தகரும் தமிழ்தாயின் தவப்புதல்வருமாகிய அருள்மிகு விபுலானந்த அடிகளார் கிழக்கிலங்கையில் உதித்தார் என்பதில் நாம் எப்போதும் பெருமை கொள்கின்றோம். அகிலம் போற்றும் அளவில் கல்விப் பணியாற்றிய அடிகளார் அவர்கள் துறவு பூண்டு இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பியதும் கல்விப்பணியினை ஆரம்பித்தது எமது கல்லூரியிலாகும். இன்று மாவட்ட, மாகாண எல்லைகளைத் தாண்டி தேசிய, சர்வதேச நிலையில் இனம் காணப்பட்ட ஒரு புகழ்பூத்த கல்லூரியாக திகழ்வதற்கு வித்திட்டவர் அடிகளாராவார்.

சுவாமி விபுலானந்த அடிகளாரின் அற்புத நூலான யாழ் நூலில் மருத நிலத்திற்குரித்தான மருத யாழின் மருதப்பண்ணிசைகளில் ஒன்றாக காணப்படும் வைகறைக்கும், விடியலுக்கும் உரித்தான ஒரு பண்ணிசையே "சாரல்" என குறித்துரைக்கப்பட்டுள்ளது. எனவே இப்பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை அசை மீட்டுப்பார்க்கும் ஒரு நோக்கிலே 'சாரல்' எனும் தலைப்பு எமது பழைய மாணவர் சங்கத்தின் அரையாண்டுச் சஞ்சிகைக்கு சூட்டப்பட்டுள்ளது என்பது இங்கு கருத்திற்கொள்ளற்பாலது.

சுவாமி விபுலானந்த அடிகளாரையும், அவரது ஆய்வு நூலையும், பசுமையான எம்மருத நிலத்தையும் மனக்கண்முன் கொண்டுவரும் 'சாரல்' நித்தியமான ஒவ்வொரு விடியலிலும் எமது கல்லூரியின் மகிழ்ச்சிக்கும், எழுச்சிக்கும் இடையறாது இசைத்துக்கொண்டிருக்க வாழ்த்துகின்றோம்.

இதழ் ஆசிரியர்

## பாடசாலை அபிவிருத்திச் சங்க வளர்ச்சியில் ..........



திருகோணமலை மாவட்டத்தை பிரபலியப்படுத்தும் அங்கத்தில் இராம கிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியும் ஒன்று என்பதை யாரும் மறுக்கமுடியாது. இக்கல்லூரிக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் இரண்டு கண்களாகும்.. இவை இரண்டும் கல்லூரி நிர்வாகத்தினுடன் அபிவிருத்திப் பாதையில் ஒரே பார்வையில் இயங்கிவருவது யாவரும் அறிந்த உண்மை. இந்த வகையில் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தின் பணியில் 1994 முதல் இன்றுவரை நானும் இணைந்து செயல்பட்டுவருபனாதலால் அதன் பணியையும் பங்கேற்பையும் இங்கு எடுத்தியம்ப சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்லூரியின் அபிவிருத்திச் சங்க வரிசையில் செயலாளர் பெரும்பணியில் நான் உட்பட திரு.குலவீரசிங்கம், திரு.சுப்பிரமணியம்., திரு.கௌரிதரன் ஆகியோரும் இன்று திரு.ஞானச்செல்வனும் அர்பணிப்புடன் செயல்பட்டுவருவது பெருமைக்குரிய விடயமாகும். இதற்கேதுவாக அதிபர்களாக திரு.சிவலோகநாதன், திரு.தண்டாயுதபாணி, திரு.இராஜரத்தினம், ஆகியோருடன் இன்று திரு.புவனேந்தரனும் அபிவிருத்திப் பாதையில் முனைபட்டுள்ளது இக்கல்லூரின் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுகின்றது.

இக்கல்லூரியின் அபிவிருத்திச் சங்கமானது கல்லூரி நிர்வாகத்திற்கும் அதன் செயற்பாட்டிற்கும் எப்பொழுதும் உறுதுணையாகவிருந்து வருவதால் இன்றும் கல்லூரியின் அபிவிருத்தி சிறப்பாகவும் எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றது.

1994ம் ஆண்டிலிருந்து இக்கல்லூரியில் ஏற்படுத்தப்பட்ட பல அபிவிருத்திச்செயல்பாடுகளை இங்கு குறிப்பிடவேண்டியது எனது முக்கிய கடமையாகும். அவையாவன சம்பந்தர் மண்டபத்தையும் அதனுடனான கட்டிடத்தொகுதியை ஏற்படுத்தியமை, பழைய மாணவர் சங்கமூலம் அமைக்கப்பட்ட கணனி கூடத்திற்கு மேலும் கணனிகளைப் பெற்றுக்கொடுத்தமை, புனித அந்தோனியார் வளாகத்தை முழுமையாக கல்விச்செயல்பாட்டிற்காக பெற்றுக்கொடுத்தமை, கல்லூரிக்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைத்து அதன்மூலம் ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு முடிவுகண்டமை, கல்லூரியின் ஆரம்ப பிரிவுக்கும், மாணவர்களுக்கான விடுதி அமைப்பதற்குமாக மின்சார நிலைய வீதியில் ஒரு காணியை பெற்றுக்கொடுத்தமை, அத்துடன் ஆரம்ப பிரிவுக்கு ஒரு கட்டிடத்தொகுதியை அமைத்தமை, கல்லூரியின் தேவைக்காக ஒரு பேருந்தைப் பெற்றுக்கொடுத்தமை, இவை மட்டுமல்ல வாசிகசாலை, விஞ்ஞான கூடம், விளையாட்டு, பாண்ட், இன்னியம், சாரணியம், புனித ஜோன் படை போன்றவற்றின் அபிவிருத்திக்கும் இச்சங்கம் ஒத்தாசை வழங்கியுள்ளது.

இவ்விடயத்தில் அவ்வேளைகளில் தோளோடு தோள் கொடுத்த பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர்களான திரு. ஜெயமோகன், திரு. உமாகாந்தன், திரு. பாரதிநாதன் ஆகியோரையும் இன்றைய செயலாளர் திரு. ஹரிதரன் அவர்களதும் பெரும் பணியையும் இங்கு குறிப்பிடுவது எனது கடமைப்பாடாகும்.

இவ்வண்ணம்

ந.இரத்தினவடிவேல். J.P
பழைய மாணவனும் பாடசாலை உறுப்பினரும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மறைந்த செல்வி G.சதாசிவம் விஞ்ஞான பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் அவர்கள் கல்விச் சமூகத்திற்கு ஆற்றிய சேவையும் அவரது ஞாபகார்த்தமாக தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட விஞ்ஞான-வினாவிடைப் போட்டியும், நினைவு தின வைபவமும்



மறைந்த செல்வி.Gசதாசிவம் ஆசிரியராக தனது பணியை தி/R.K.M.S.K இந்துக்கல்லூரியில் ஆரம்பித்து உதவிக் கல்விப்பணிப்பாளராக திருமலை மாவட்டம் முழுவதும் தனது சேவையை கல்விச் சமூகத்திற்கு நீடித்தார். இவரது வினைதிறன் மிக்க ஆசிரியர் சேவையை 1976-1979 காலப்பகுதியில் நான் இந்துக்கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் அறியும் சந்தர்ப்பம் கிடைத்தது. தான் கற்பிக்கும் க.பொ.த (உ/த) தாவரவியல் பாடத்தில் சிறந்த தேர்ச்சி உடையவராக இருந்த போதிலும் பாடத்தைக் கற்பிக்க முன் மாணவர்களின் அடைவு மட்டங்களுக்கேற்ப ஆயத்தம் செய்வது இவரது சிறப்பு அம்சமாகும்.

வகுப்பறையில் பாடத்தை மட்டுமன்றி வாழ்க்கைக்குத் தேவையான பல விடயங்களை பாடம் பிரவேசத்தில் பாடத்துடன் தொடர்புபடுத்தி மாணவர்களுக்கு எடுத்துரைப்பது அவரது வழமையான நடவடிக்கையாகும். தனது பாடசாலை, தனது வகுப்பு தனது மாணவன் என்ற உணர்வு அவரிடம் எப்பொழுதும் காணப்படும். மாணவர்களுக்கும் இவர் தங்களில் கவனம் செலுத்துகிறார் என்ற உணர்வு காணப்படும். இவரது காலத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் மிகக்குறைவு, எனினும் மேலதிக வகுப்புக்களை பாடசாலையில் நடாத்தி மாணவர்கள் அடைய வேண்டிய கற்றலை முழுமையாக அடையச் செய்து திருக்கோணமலையில் பல மருத்துவர்களையும் மருத்துவ நிபுணர்களையும் உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் திருமலை மாவட்டம் முழுவதற்கும் தனது சேவையை நீடித்தார். அவரது காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞானப் பொருட்காட்சி, விஞ்ஞான ஆய்வுகூடப் போட்டிகள், க.பொ.த(உ/த) மாணவர்களுக்கான பொதுக்கருத்தரங்குகள், விஞ்ஞான வினாவிடைப் போட்டி, ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் போன்ற செயற்பாடுகள் திருகோணமலையில் விஞ்ஞானபாட கல்வி அபிவிருத்திக்கான அத்திவாரமாகும். அனைத்து விஞ்ஞான பாட ஆசிரியர்களையும் ஒன்றிணைத்து இச் செயற்பாடுகளை திறம்பட நடாத்துவது அவரது தனிப்பட்ட ஆளுமையாகும்.

இவரது நினைவாக அவரின் வளர்ப்பு மகன் திருS.மனோகரனின் அனுசரணையுடன் திருக்கோணமலை T/R.K.M Sri Koneswara Hindu College பழைய மாணவர் சங்கத்தினால் அவரது நினைவு தினத்தில் நடாத்தப்பட்ட (30-03-2011) க.பொ.த (உ/த) கணித விஞ்ஞான மாணவர்களுக்கான விஞ்ஞான வினாவிடைப் போட்டியும் ஞாபகார்த்த நிகழ்வும் அவரை அனைவரும் மீள நினைவு கூருவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது.

திருக்கோணமலை விஞ்ஞான வினாவிடைப் போட்டிக்காக கல்வி வலயத்தில் உள்ள எட்டு AB பாடசாலைகளிலுமுள்ள அனைத்து க.பொ.த (உ/த) மாணவர்களுக்கும் இரசாயனவியல், பௌதீகவியல், உயிரியல், இணைந்த கணிதம் பாடப்பரப்புக்களை உள்ளடக்கியவாறு எழுத்துப் பரீட்சை நடாத்தப்பட்டது.

கூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் ஐந்து மாணவர்களும் ஒவ்வொரு பாடசாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்டு இவ் வெட்டுக் குழுக்களுக்கம் மீள வினாவிடைப் போட்டி நடத்தப்பட்டு இரு குழுக்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டது. இறுதிப் போட்டியில் தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும், தி/இ.கி.மி கோணேஸ்வரா இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றது. பங்கு பற்றிய அனைத்துப் பாடசாலை நூல் நிலையங்களிற்கும் பெறுமதியான நூல்களும், வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும், சான்றிதழ்களும் பழைய மாணவர் சங்கத்தினரால் வழங்கப்பட்டது. அத்துடன் எழுத்துப் பரீட்சையில் மாணர்வகள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் விசேட சித்தி, திறமைச் சித்தி, சாதாரணசித்தி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

இப் போட்டிகளை க.பொ.த (உ/த) கணித விஞ்ஞான கல்வித் தர வட்ட அங்கத்தவர்கள் சிறப்பாக நடாத்தினார்கள் இந் நினைவுதின நிகழ்வில் அவரது மாணர்வகள் அவரது காலத்தில் அவரிடம் வேலைசெய்த அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிகாரிகளுடன் அதிபர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், இளைப்பாறிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணர்வகள் கல்வித்தர வட்ட அங்கத்தவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தமை சிறப்பம்சமாகும்.

ச.சுதாகரன்
(பழைய மாணவர்)
வலயக்கல்வி அலுவலகம்
திருக்கோணமலை

மின்னஞ்சல் வசதியுடன் இருக்கும் பழைய மாணவர்கள் oba@trincohindu.sch.lk என்ற பழைய மாணவர் சங்க மின்னஞ்சலுடன் தொடர்பை ஏற்படுத்துமாறு வேண்டப்படுகிறீர்கள். தங்கள் முதல் மின்னஞ்சலில் உறுப்புரிமை இருப்பின் இலக்கத்தையும் குறிப்பிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓய்வுபெற்ற ஆசிரியர் பசீர் அமீரின் சேவை நலன் பாராட்டு நிகழ்வு

கல்லூரி ஒன்றின் புகழ் வெறுமனே கல்வி நடவடிக்கைகளில் மட்டும் தங்கியிருப்பதில்லை. இணைப்பாடவிதான செயற்பாடுகள் பாடசாலை ஒன்றின் பெயரை பார் எங்கும் பரப்புவதாக அமைகின்றது. இதில் விளையாட்டு முக்கிய பங்கினை வகிக்கின்றது.

எமது கல்லூரி விளையாட்டுத்துறையின் பெயர் பிரல்யமாவதற்கு 19 வருடங்களாக ஜனாப் பசீர் அமீர் காரணமாக அமைந்திருக்கின்றார். அவரின் விடாமுயற்சி மாணவர்கள் திறமைகளை பல்வேறு மட்டங்களில் வெளிப்படுத்துவதற்கு காலாக அமைந்திருக்கின்றது.

வெற்றியை மட்டும் நோக்காக கொண்டிராமல் விளையாட்டின் மகத்துவத்திற்கு ஏற்ப பங்குபற்றுதலில் அதிக ஈடுபாடு காட்டியவராக விளங்குகின்றார். இதன் காரணமாக பல்வேறு போட்டிகளில் மாணவர்கள் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றிகளை ஈட்டிக் கொள்வதற்கு காலாக அமைந்திருந்தது.

தனது வாழ்நாளில் அதிகப்படியான நாட்களை கல்லூரியிலேயே கல்லூரிக்காக கழித்திருக்கின்றார். 1992 ஆம் வருடம் மாசி மாதம் பதினாறாம் நாள் உதவி ஆசிரியராக கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றிருந்தார். அப்போது அதிபராக திரு. சி.தண்டாயுதபாணி கடமையாற்றிக் கொண்டிருந்தார். பசீர் அவர்களின் விளையாட்டு திறமைகள் காரணமாக விஞ்ஞான ஆசிரியராக அவர் நியமனத்தை கொண்டிருந்தாலும் விளையாட்டுத்துறைக்கு அவரை இணைத்துக் கொண்டார். அவ்வேளையில் திரு.சி.ஈஸ்வரதாசன் பொறுப்பாசிரியராக இருந்தார். அவர் இடமாற்றம் பெற்று சென்றதும் ஆனி மாதம் விளையாட்டுத்துறை பொறுப்பு முழுமையாக பசீர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

தனது முதல் நிகழ்வாக ஆரம்பபிரிவு மாணவர்கள் மத்தியில் விளையாட்டுப்போட்டி ஏற்பாடு செய்திருந்தார். அப்போது முதல் அவரின் உதவியாளராக சேவையாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இருவரும் அப்போது தொடக்கம் விளையாட்டுத் துறையை துரிதமாக வளர்ச்சியடைய நடவடிக்கைகள் மேற்கொண்டோம். கல்லூரி உள்ளக மைதானத்தில் இது நடத்தப்பட்டது. இதன் பின்னர் 1993ஆம் வருடம் முதல் முறையாக இல்லங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியை நாம் இணைந்து நடத்தினோம். எமது முதல் போட்டியை நினைவுபடுத்தும் முகமாக அவ்வருடம் தொடக்கம் மெய்வல்லுநர் போட்டியில் மாணவர்களின் அடைவுகளை சாதனைகளாக கருதி பதிவு செய்யும் முயற்சியை மேற்கொண்டு தொடர்ந்து அதனைப் பேணிவருகின்றோம். வருடாந்தம் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு தனியாகவும், மற்றைய மாணவர்களுக்கு தனியாகவும் விளையாட்டுப்போட்டி நடாத்தப்படுகிறது.

1992ஆம் வருடம் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிறேமதாசா வெற்றிக்கிண்ணத்துக்காக லொட்டோ நிறுவனம் நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்து சுற்றுப்போட்டிக்கு மாணவர்களை தயார் செய்து உதைபந்து துறையில் மாணவர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கையில் இறங்கி இத்தொடரிலும் பங்கு கொண்டோம். எமது மாணவர்கள் முதல் தடவையாக மின் ஒளியில் விளையாடும் வாய்ப்பு அதன் மூலம் கிடைத்தது. தொடர்ந்து நடத்தப்பட்ட இப்போட்டிகள் இரண்டில் பங்கு கொண்டோம்.

1993ஆம் வருடம் மாபெரும் கிரிக்கெட் போட்டி ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக 18 தடவைகள் இப்போட்டியினை கொண்டு நடாத்திய பெருமை அவரையே சாரும். 11 தடவைகள் எமது கல்லூரி அணியினர் வெற்றிபெற காலாக இருந்துள்ளார். இவரது பயிற்றுவிப்பில் மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்திய சுற்றுப்போட்டிகளில் கல்லூரி ஏனைய கழகங்களுக்கு சவாலாக அமைந்திருந்தது.

1995ஆம் ஆண்டு 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான மைலோ கிண்ணத்துக்காக நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தினை எமது கல்லூரி அணி பெற்றுக் கொண்டது. இம் மாணவர்களை பயிற்றுவிக்கும் பணியில் என்னுடன் தோள் கொடுத்து செயற்பட்டு வெற்றியினைப் பெறுவதற்கும் வழிவகுத்தார்.

1997ஆம் வருடம் எமது கல்லூரி நூற்றாண்டு விழாவினை கொண்டாடியபோது விளையாட்டுப் பிரிவு சார்பாக அதனை கொண்டாடும் முகமாக தேசிய பாடசாலை தினத்தை குறிக்கும் முகமாக வருடாந்தம் வீதி ஓட்டப்போட்டியையும், கல்லூரி தினத்திற்காக சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடத்தப்பட்டது. அதுபோன்று வேறு பாடசாலை ஆசிரியர்களையும் இணைக்கும் முகமாக வலைப்பந்து சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்பட்டது. அதில் 8 பாடசாலைகள் கலந்து கொண்டிருந்தன. இப்போட்டியானது பலரது பாராட்டுதல்களை பெற்றிருந்தது.

பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்த காலத்தில் மெய்வல்லுநர் விளையாட்டுக்களில் பரிதிவட்டம் வீசுதல், குண்டுபோடுதல். நிகழ்ச்சிகளில் அதிக ஈடுபாடு கொண்டவராக விளங்கியிருந்தார். பல போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றிகளையும் பெற்றிருந்தார். 1966ஆம் ஆண்டு அநுராதபுரத்தில் நடைபெற்ற இலங்கை பாடசாலைகள் விளையாட்டுப் போட்டியில் 16 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் இரண்டாம் இடத்தினையும் பெற்றிருந்தார். இது எமது பாடசாலை மாணவன் ஒருவன் தேசிய மட்ட போட்டியில் பெற்ற முதல் வெற்றியாகும்.

மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளில் மாணவர்களை பயிற்றுவித்து தேசிய மட்ட பெருமையினை எமது கல்லூரி பெறுவதற்கு காலாக இருந்து செயற்பட்டார். 1996ஆம் வருடம் 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான குண்டுபோடுதல் நிகழ்வில் செல்வன் கிசான் ரங்கா தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினையும், 1998ஆம் வருடம் செல்வன் ஜீ.நிரஞ்சன் 21 வயதுக்கு உட்பட்வர்களுக்கான 100 மீற்றர் போட்டியில் முதலாம் இடத்தனையும், 200 மீற்றர்போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர். இம்மாணவர்களை பயிற்றுவித்த பெருமை இவரையே சாரும். கிரிக்கெட் விளையாட்டில் கொண்ட ஈடுபாடு காரணமாக திருக்கோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் இணைந்து கொண்டு பல வருடகாலமாக தலைமைப் பதவியினை ஆற்றி வருகின்றார். இவரது காலத்தில் 2004ஆம் வருடம் ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நடத்திய மாவட்டங்களுக்கு இடையிலான (Minor District) போட்டியில் சம்பியன் நிலையினை திருகோணமலை மாவட்டம் பெற்றுக் கொண்டது. எமது மாவட்டத்தை கிரிக்கெட் விளையாட்டில் தேசிய மட்டத்தில் பெயர் பதிக்க வைத்த போட்டியாகவும் இது அமைந்திருந்தது.

1955 ஆம் ஆண்டு திருகோணமலை இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வியை தொடங்கிய இவர் 1960 வரை கற்றார் பின்னர் இந்துக் கல்லூரியில் கல்வியை 04.01.1960 தொடக்கம் 10.12.1969 வரை மேற்கொண்டார். தனது பாடசாலை நாட்களில் உதைபந்தாட்டத்தில் சிறந்து விளங்கி இருந்தார். சில வருடங்கள் அணியினை தலைமை தாங்கும் பணியினையும் மேற்கொண்டிருந்தார். இது அவரது தலைமைத்துவ ஆற்றலை வெளிப்படுத்தியது. மற்றவர்களிடம் நோகாமல் விடயத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் அவருக்கு நிகர் அவரே. பாடசாலை கல்வியை முடித்தாலும் அவர் பாடசாலைக்கு தொடர்ந்து சேவைகளை செய்து வந்திருந்தார். விளையாட்டுப் போட்டிகளில் பாடசாலையில் நடைபெறும்போது நடுவராக சேவையாற்றும் பணி தொடர்ந்து வழங்கப்பட்டிருந்தது.

ஆசிரியர் நியமனம் பெற்று 1979ஆம் ஆண்டு வேறுபாடசாலைக்கு சென்று அங்கிருந்து அரசியலில் பிரவேசித்து பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட காலம் தவிர்ந்த அநேக காலங்கள் கல்லூரியுடனேயே இவருக்கு கழிந்தது. இவர் கல்லூரியை விட்டு பிரியப் போவதில்லை. நிர்வாக ரீதியாக அரச இடமளிக்காது விட்டாலும் கல்லூரிக்கு இவரின் சேவை தொடர்ந்து கிடைக்கும் என்று நாம் நம்பிக்கை கொள்ளும் அளவுக்கு தன்னை திடப்படுத்திக் கொண்டவராக விளங்குகின்றார். இவருக்கு ஓய்வு இல்லை. சளைக்காமல் எந்நேரமும் விளையாட்டுக்காக மைதானத்திற்கு சமூகமளித்து மாணவர்களை ஊக்கப்படுத்தும் இந்த நல்ல மனிதத்தை நாமும் பாராட்டுவோமாக.

சி.சசிக்குமார் - ஆசிரியர் தி/ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8வது வருடாந்தப் பொதுக்கூட்ட நிகழ்வும், புதிய நிர்வாகக்குழு தெரிவும்.



தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 2011ம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபையினர் சங்க யாப்பு விதிக்கு அமைவாக 27.03.2011 இல் இடம் பெற்ற 8வது பொதுக்கூட்டத்தின் போது தெரிவு செய்யப்பட்டனர்.

அவர்களின் விபரங்கள் வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. இ. புவனேந்திரன் | - | தலைவர் |
| 2. | திரு. தி. ஹரிதரன் | - | செயலாளர் |
| 3. | திரு. ச. சர்வேஸ்வரன் | - | பொருளாளர் |
| 4. | திரு. செ. பத்மசீலன் | - | உபதலைவர் |
| 5. | திரு. ந. குமணன் | - | உபதலைவர் |
| 6. | திரு. இ. கைலைவாசன் | - | உபசெயலாளர் |
| 7. | திரு. ச. பரமேஸ்வரன் | - | உபபொருளாளர் |
| 8. | திரு. இ. சுப்ரமணியம் | - | நிர்வாகசபை உறுப்பினர் |
| 9. | திரு. ச. பாரதிநாதன் | - | நிர்வாகசபை உறுப்பினர் |
| 10. | திரு. ச. சிறிதரகுமார் | - | நிர்வாகசபை உறுப்பினர் |
| 11. | திரு. இ. அசோக் | - | நிர்வாகசபை உறுப்பினர் |
| 12. | திரு. நா. நித்தியகுமார் | - | நிர்வாகசபை உறுப்பினர் |
| 13. | திரு. த. சிவநாதன் | - | நிர்வாகசபை உறுப்பினர் |
| 14. | திரு. அ. ஜெயக்குமார் | - | நிர்வாகசபை உறுப்பினர் |
| 15. | திரு. இ. ஹரிகரன் | - | நிர்வாகசபை உறுப்பினர் |
| 16. | திரு. சா. ஸ்ரீதரன் | - | நிர்வாகசபை உறுப்பினர் |
| 17. | திரு. ந. து. ரகுராம் | - | நிர்வாகசபை உறுப்பினர் |
| 18. | திரு. பீ. ரவிச்சந்திரன் | - | நிர்வாகசபை உறுப்பினர் |
| 19. | திரு. வி. சந்திரபவன் | - | நிர்வாகசபை உறுப்பினர் |

**நடப்பாண்டிற்கான செயற்திட்டங்கள் :**

எமது கல்லூரியின் அவசரதேவைகளையும், கல்லூரியினதும் பழைய மாணவர் சங்கத்தினதும் வருடாந்த நிகழ்வுகளையும் செவ்வனே நிறைவேற்றுவதற்கு, பழைய மாணவர்களினது ஒத்துழைப்புக் களும், உதவிகளும் இன்றியமையாதவையாகக் காணப்படுகின்றது. இதன் அடிப்படையில் முன்னுரி மைப்படுத்தப்பட்ட திட்டங்களாக பின்வருவன விளங்குகின்றன.

1. ஆரம்பப்பிரிவு வளாகத்தை பூரணத்துவப்படுத்துதல்.
2. விளையாட்டுமைதானத்தை மேம்படுத்துதல்.
3. சாதனை புரியும் மாணவர்களையும் பழைய மாணவர்களையும் கௌரவித்தலும் ஊக்குவித்தலும்.
4. சேவையால் உயர்ந்த பழைய மாணவர்களை அடையாளம் கண்டு உலகறியச் செய்தல்.
5. பொருளாதாரப் பற்றாக்குறை காரணமாக கல்வியில் பின்னடைவை எதிர்நோக்கும் மாணவர்களிற்கான புலமைப்பரிசில் திட்டம்
6. எமது கல்லூரியின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கு கல்லூரி நிர்வாகத்தினரினால் அடையாளம் காணப்படும் திட்டங்களை செயற்படுத்த ஆவன செய்தல்.

தேசிய மட்டத்தில் அல்லது சர்வதேச மட்டத்தில்
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
பழைய மாணவர்கள் சாதனை படைத்திருப்பின்
பழைய மாணவர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

எந்திரி. தி. ஹரிதரன்
செயலாளர்,
பழைய மாணவர்சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புலம்பெயர் மாணவர்களின் ஒன்றுகூடலும் Laptop கணினி கையளிப்பு நிகழ்வும் :

எமது கல்லூரியின் ஆரம்பபிரிவு வளாகத்தில் 15.04.2011 அன்று பி.ப. 7.00 மணியளவில் புலம்பெயர் பழைய மாணவர்களுடனான ஒன்றுகூடல் ஒன்று இடம் பெற்றிருந்தது. இந்நிகழ்வின்போது வருகை தந்திருந்த, அவுஸ்தி ரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவன் Dr.S. சிவநாதன் அவர்களால் Laptop கணினி ஒன்று பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளிற்கென எமது சங்கத் தலைவர் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது கலந்து கொண்ட, இலண்டனில் புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவன் திரு.ச.லிங்கேஸ்வரன் அவர்களிடம், பழைய மாணவர் சங்க - இலண்டன் கிளையின் தலைவருக்கும் செயலாளருக்கும் சமர்ப்பிக்கும்படி கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டது. இம்மடலில் அவர்களின் கடந்தகாலச் செயற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்தும் ஓர் பொதுக்கூட்டத்தை கூட்டுவதன் மூலம் அங்கே வாழ்கின்ற பலரை புதிதாக சங்கத்தில் இணைத்து சங்கத்தை வலுப்படுத்தலாம் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

திரு.ச.சிறிதரகுமார் - உதவி இதழ் ஆசிரியர்



## ஆரம்பப்பிரிவு வளாக பௌதீகவிருத்தியும் மாணவர் விடுதியும்

எமது கல்லூரியின் ஆரம்பப்பிரிவுக்காகவும், விடுதி அமைப்பதற்காகவும் அரச சுவீகரிப்பு மூலம் பெறப்பட்ட 168பேர்ச் காணி தற்போது முழுமையாக கல்லூரியால் பொறுப்பேற்கப்பட்டு தேவையான கட்டுமான அமைப்பு வேலைகள் கட்டம் கட்டமாக நடைபெற்று வருகின்றன.

முதற்கட்டமாக நிக்கோட் நிறுவனத்தின் அனுசரணையில் அமைக்கப்பட்ட கூட்ட மண்டபத்துடனான (120X30) மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் கடந்த வருடம் முழுமையாக நிறைவு பெற்று 21.02.2010ல் 12 வகுப்பறைகளைச் சேர்ந்த 436 மாணவர்கள் இவ்வளாகத்திற்கு உள்வாங்கப்பட்டனர்.

மேலும் தேவையான 9 வகுப்புக்களும், நூலகம், கணினி அறை, விசேடவகுப்பறை போன்ற தேவைக்கான (90X30) மூன்று மாடிக் கட்டடத்தின் முதற்கட்ட வேலைகள் கடந்த வருட இறுதியில் அங்கீகரிக்கப்பட்டு தற்போது அம்முதற்கட்ட வேலைகளில் பெரும்பகுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. இம்மூன்று மாடிக் கட்டடம் முழுமைபெறும் போது ஆரம்பப்பிரிவு மாணவர்கள் அனைவருக்கும் அனைத்து வசதிகளும் வழங்கப்படக் கூடியதாக அமையும்.

இந் நிலைமைக்கு மத்தியில் சென் அந்தனிஸ் வளாகத்தில் இருந்த 9 வகுப்புகளைச் சேர்ந்த 350 மாணவர்களையும் இவ்வருட இரண்டாம் தவணை ஆரம்பத்திற்குள் உள்வாங்கவேண்டிய அவசர தேவை ஒன்று ஏற்பட்டதன் விளைவால் பெற்றோரினதும், ஒபர்(Offer) அமைப்பினதும் மற்றும் ஆளுனர் அலுவலகத்தின் பங்களிப்பிலும் நான்கு வகுப்பறைகளுக்குத் தேவையான தற்காலிக மண்டபம் உடன் அமைத்து முடிக்கப்பட்டது. இதற்கமைவாக ஆரம்பபிரிவு முழுமையாக 25.04.2011 திகதியிலிருந்து புதிய வளாகத்தில் இயங்கிவருகின்றது. இத்தற்காலிக மண்டபத்தில் வசதிக்குறைவுகள் காணப்படினும் புதிய கட்டிட அமைப்பு முழுமை பெறும் போது இவை முழுமையாக நீங்கிவிடும்.

கிழக்கு மாகாண முதலமைச்சரின் 2மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சமகாலத்தில் அதிபர் விடுதியுடன் கூடிய ஆரம்பப்பிரிவு நிர்வாகக் கட்டிட அமைப்பு வேலைகளும் ஆரம்பமாகியுள்ளமை ஆரம்பப்பிரிவு செயற்பாட்டை மேலும் முழுமை பெறச்செய்யும் செயற்பாடாக அமைந்துள்ளது.

இத்துடன் யுனிசெப் அமைப்பின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டுவரும் மலசலகூடத் தொகுதி நிறைவுபெறும் நிலையில் உள்ளது. துரிதமான ஆரம்பபிரிவு அபிவிருத்தியில் இச்சுகாதார வசதி அமைப்பும் முக்கிய பங்களிப்பாக கொள்ளப்படுகின்றது.

ஆரம்பபிரிவு வேலைகள் துரிதகதியில் நிறைவு பெற்று வரும் இவ்வேளையில் இதற்கு பங்களிப்பு செய்த, செய்து கொண்டிருக்கின்ற அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் கல்லூரிச் சமூகம் சார்பாக நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

இவ்வளாகத்தில் ஒதுக்கப்பட்டுள்ள மாணவர் விடுதிக்கான இடத்தில் அமைய வேண்டிய விடுதிக்கட்டிட அமைப்புக்காக அனைவரும் ஆர்வத்துடன் ஈடுபடவேண்டியே எதிர்காலச் செயற்பாடாக அமையும்.

மா.இராசரெத்தினம்
முன்னாள் அதிபர் - தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# EDUCATION FOR THE TWENTY-FIRST CENTURY

If a society is to grow and be human, values have to be cherished. The educational system should not only promote academic achievement but also human virtues simultaneously. It is the unanimous view of educationists all over the world that there is a need for a holistic educational system based on this concept. As an example, I wish to quote excerpts from the report of the De Lors Commission on Education for the Twenty-first Century which delineates the tasks of education as follows:

"It is to succeed in its tasks, education must be organized around four fundamental types of learning which, throughout a person's life, will in a way be the pillars of knowledge: learning to know, that is acquiring the instructions of understanding, learning to do, so as to be able to act creatively on one's environment, learning to live together, so as to participate and co-operate with other people in all human activities, and learning to be, an essential progression which proceeds from the previous three. Of course, these four paths of knowledge all form a whole, because there are many forms of contact, interaction and exchange among them. Yet formal education has traditionally focused mainly, if not exclusively. on learning to know and to a lesser exten t on learning to do. The two others are to a large extent left to chance, or assumed to be the natural products of the two former. The Commission believes that equal attention should be paid in all organized learning to each of these four pillars. So that education is regarded as a total experience throughout life, dealing with both understanding and application, and focusing on both the individual and the individual's place in society.

How I imbibed learning to be as a student of Trincomalee RKM. Hindu College.

My memories roll back to the nineteen forties and fifties when I was a student and later an English teacher at Trincomalee RKM Hindu College, which was then under the management of the Rama Krishna Mission. The Principals and the teaching staff were role models for devotion to duty, dedication and character. That instilled in my mind reverence to teachers and elders and was able to mould my character too. Learning the lives and teachings of Sri Ramakrishna Paramahamsa and Swami Vivekananda and following the objectives of the Mission by developing steadfast faith in God and respect for other faiths, which automatically lead to peaceful and harmonious co-existence with other communities. Participation in cultural programs, elocution and essay competitions organized by the College, based on faith and values reinforced the convictions. Motivation by teachers to engage in selfless service to the society strengthened the belief that "Service to man is service to God". Through this learning process I was able to translate into action the values that I imbibed in school throughout my life and I am really proud to call myself a past student of RKM Hindu College.

The management also provided an opportunity for students to learn Sanskrit in school as an optional subject, presumably for the benefit of those who wished to learn Hindu scriptures on their own even at some later stage. Houses for sports meet were named as Ramakrishna house, Vivekananda house, Vipulananda house etc. so as to educate students how values could be applied even in the field of sports, which tradition is still being followed by the College.

Another valuable lesson I was able to learn while in school was simplicity and sacrifice. RKM Hindu College, Sivananda Vidyalayam and some other schools in the Eastern Province managed by Ramakrishna Mission were then under the supervisory control of Swami Nadarajananda who was stationed at Batticaloa. Whenever he visited Hindu College and wanted to return to Batticaloa, he used to walk from the College to the Trincomlee railway station, carrying his bedding himself and travelled by the bug-infested third-class compartment. Some of us used to accompany him to the railway station. Such was his simplicity and sacrifice.

Even though there are deficiencies in the progression on learning to be in our present system of education, such deficiencies could always be supplemented through integration of values in the teaching system without making any changes whatsoever in the curriculum, by proper training imparted to teachers. This is not a theory but something practiced in countries like Australia following the integral system adopted by the Sri Sathya Sai Institute of Higher Learning, which has been referred to as a "Model Institute" by the Association of Indian Universities. This is a valuable gift to the world of education.

Dynamic parenting is an integral part of education, which is not given its due place in our educational system. This aspect also needs attention to evolve a holistic system of education.

I sincerely thank the editor of "Saaral" and the T/RKM Koneswara Hindu College O.B.A for this opportunity.

T.Kulaveerasingam,
An old student - Retd.Asst.Secretary to the Governor - North East Province


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
# 2010 க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சாதனை

கல்வி பொதுச் சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறு பற்றி நோக்குகையில் எமது கல்லூரியின் கடந்த கால பெறுபேறுகளின் ஓர் தொடர்ச்சியான அதிகரிப்பானது இம்முறை உயர்வான சாதனை மட்டத்தை அடைந்துள்ளமை சிறப்பான அம்சமாகும். அந்த அடிப்படையில் பாடரீதியான அடைவு, கா.பொ.த உயர்தரம் கற்பதற்கான அடிப்படை தகைமை மற்றும் ஒன்பது பாடங்களிலும்9A சித்திப்பேறு என்பவற்றை குறிப்பிடமுடியும் இந்த பெறுபேற்று அடைவு தொடர்பான அட்டவணை கீழே தரப்படுகின்றது.

| | |
|---|---|
| No. of Students Applied | - 164 |
| No. of Students sat for the Examination | - 160 |
| No. of Students Passed in Six Subjects and Above, Including Mathematics and Tamil Language | - 141 |
| Percentage of Students Passed in six Subjects and Above, Including Mathematics and Tamil Language | - 88.67 |
| No. of Students Qualified to follow G.C.E (A/L) | - 151 |
| Percentage of students Qualified to follow G.C.E(A/L) | - 94.96 |
| No. of Students obtained 9As in all subjects. | - 13 |

| Subject | No. App | No. Sat | No. of A's | No. of B's | No. of C's | No. of S's | No. of W's | No. Passed | Passed % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Saivanery | 138 | 134 | 92 | 21 | 11 | 07 | 02 | 132 | 98.50 |
| R.C | 08 | 07 | 04 | - | 01 | 01 | 01 | 06 | 85.71 |
| N.R.C | 04 | 04 | 03 | 01 | - | - | - | 04 | 100 |
| Islam | 14 | 14 | 08 | 04 | 02 | - | - | 14 | 100 |
| Tamil Language | 164 | 159 | 57 | 53 | 32 | 14 | 03 | 156 | 98.11 |
| English Language | 164 | 159 | 49 | 15 | 29 | 39 | 27 | 133 | 83.01 |
| Science & Technology | 164 | 159 | 42 | 16 | 84 | 10 | 07 | 150 | 95.59 |
| Mathematics | 164 | 159 | 91 | 18 | 31 | 14 | 05 | 154 | 96.85 |
| History | 164 | 159 | 43 | 41 | 59 | 15 | 01 | 158 | 99.37 |
| Geography | 25 | 23 | 04 | 06 | 05 | 07 | 01 | 22 | 96.65 |
| Business & Accounting Studies | 139 | 136 | 42 | 26 | 47 | 18 | 03 | 133 | 97.79 |
| Art | 24 | 22 | 01 | - | 05 | 13 | 03 | 19 | 86.36 |
| Music | 38 | 35 | 27 | 05 | 01 | 01 | - | 34 | 100 |
| Appreciation of English Literary Texts | 19 | 19 | - | 03 | 07 | 04 | 05 | 14 | 73.68 |
| Appreciation of Tamil Literary Texts | 83 | 83 | 24 | 15 | 21 | 13 | 10 | 73 | 87.95 |
| Information Technology | 90 | 89 | 23 | 23 | 30 | 10 | 03 | 86 | 96.62 |
| Physical Education | 17 | 16 | 04 | 03 | 08 | 01 | - | 16 | 100 |
| Agriculture & Food Technology | 57 | 54 | 19 | 13 | 19 | 02 | 01 | 53 | 98.14 |

இப்பரீட்சை பெறுபேறுகளில் 7 பாடங்களில் A சித்திகளை 14 மாணவர்களும் 8 பாடங்களில் A சித்திகளை 04 மாணவர்களும் பெற்றுள்ளனர். இவற்றுக்கு மேலாக 9 பாடங்களிலும் A சித்திகளை பெற்ற மாணவர்களினது விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 1.Rajendran Pravishan | 9A. |
| 2.Thileepan beniel. | 9A |
| 3.Ruban Jeevanathan. | 9A |
| 4.Robert Vimalathas Roghilo.. | 9A |
| 5.Rasakesary Rushan | 9A |
| 6.Chandran Branavan | 9A |
| 7.Sooriyapragasam Nilakshman | 9A |
| 8.Velumanickam Niloshan | 9A |
| 9.ratnakumar Rajan | 9A |
| 10.Ravindraraja Abinayan | 9A |
| 11.Arunthavarajah Anuvatahanan | 9A |
| 12.Meiyalagan Sarujan | 9A |
| 13.Jeyarathan Sujinthanraj | 9A |

இப் பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் தோற்றிய 17 மாணவர்களும் 9 பாடங்களிலும் சித்தி பெற்று உயர்தரம் கற்க தகுதி பெற்றமை குறிப்பிட தக்க அம்சமாகும் . இம் மாணவர்களது பரீட்சை பெறுபேறு உயர்வாக அமைவதற்கு வகுப்பறை கற்பித்தல் செயற்பாட்டுடன் விசேட செயற்றிட்டம் அலகு ரீதியாக பரீட்சை அப்பரீட்சைகளின் புள்ளிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு கலந்துரையாடல் மூலம் விடை எழுதும் முறை தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டமை இப்பேறுபேறுகளின் உயர்ச்சிக்கு காரணியான அமைந்தது. இதனை நாம் மேற் கொண்ட மதிப்பிட்டு கண்காணிப்பு ஆலோசனை மேற்பார்வை நுட்பங்கள் மூலமாக அறிய முடிந்தது.

எமது பாடசாலையில் கற்கும் மாணவர்கள் கல்லூரியிலிருந்து வெளியேறும் போது அடிப்படை தகைமைகளை பெற வேண்டும் என்பதில் எமது முன்னாள் அதிபர் திரு.மா.இராசரெட்ணம் அவர்களது தூரநோக்கு பற்றி குறிப்பிட வேண்டும். அதற்காக அவரது பங்களிப்பையும் வழிகாட்டலையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

இப்பெறு பேறுகளுக்காக நாம் கற்பிக்கும் வகுப்புகளுக்கு அர்ப்பணிப்பான சேவைகளை வழங்கிய பாட ஆசிரியர்கள் வகுப்பாசிரியர்கள், மற்றும் இப் பிரிவிற்கு பொறுப்பான பகுதித் தலைவராக செயற்படும் திருமதி.இ.விஜயரட்ணம் அவர்களையும் பாடவிதானங்களுக்கு பொறுப்பான பிரதி அதிபராக இருந்து கற்றல் செயற்பாடுகளுக்கு உதவிய திரு.இ.முருகதாஸ் அவர்களுக்கும் நன்றி கூறுவதுடன் இப் பணியில் கடமையாற்றிய சகலரையும் பாராட்டுவதுடன் இப் பெறுபேறுகளை பெற்று தொடர்ந்து கற்று கொண்டிருக்கும் மாணவர்களையும் பாராட்டுகின்றேன்.

செ.பத்மசீலன்
பிரதி அதிபர் - (நிதி நிர்வாகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாணவர் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி அனுபவம்....

மாணவர்களின் மனதைத் தொட்ட கல்லூரி மாணவர்களுக்கான இரு நாள் பயிற்சிப் பாசறை கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு 16.04.2011, 17.04.2011 ஆகிய திகதிகளில் இனிதே நடைபெற்றது. இந்தப் பயிற்சிப் பாசறையின் வளவாளர்களான திரு.A.C.இமானுவேல் மற்றும் திரு.C.ஞானகணேசன் ஆகியோர் மாணவ தலைவர் களுக்கு பயிற்சியளித்தனர்.

மாணவர் தலைவர்களுக்கான ஆளுமை விருத்தி, நேர முகாமைத்துவம் தொடர்பாடல் போன்ற விடயங்கள் மாணவர் தலைவர் மத்தியில் மாணிக்கமாய் பதிக்கப்பட்டன. மாணவர்களது திறனை விருத்தி செய்வதற்காக பல்வேறு விளையாட்டு நுட்பங்கள் கையாளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு நாள் பயிற்சிப் பாசறை மூலம் மாணவ தலைவர்கள் தம் சுய ஆளுமையை விருத்தி செய்யக்கூடியதாக இருந்தது. மாணவர்கள் மாணவ தலைவர்கள் மத்தியில் காணப்படும் உறவுகளை விருத்தி செய்த பயிற்சிப் பாசறை முகாமாக இது விளங்கியது. இந்தப் பயிற்சிப் பாசறையை ஒழுங்கமைத்த பாடசாலை நிர்வாகத்திற்கும், பாடசாலை பழைய மாணவர் சங்கத்திற்கும் என்றும் நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கின்றோம்.

மாணவர் தலைவர் சார்பாக
முதன்மை மாணவ தலைவன்
S.கௌரீசன்



## BATTLE OF THE GOLD

திருகோணமலை மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலையான தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியும், மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான மட்/இ.கி.ச சிவானந்தா வித்தியாலயமும் இணைந்து நடாத்தும் மாபெரும் கிரிக்கற் சமர் "The Ballte of the Gold" எனப்படும் கடினப்பந்து கிரிக்கற் போட்டி 1993ம் ஆண்டு தொடக்கம் இரண்டு பாடசாலைகளுக்குமிடையில் நடைபெற்று வருகிறது. ஒரு வருடம் திருகோணமலையிலும், மறுவருடம் மட்டக்களப்பிலுமென இது மாறிமாறி நடைபெறுவதே இதன் சிறப்பு அம்சமாகும்.

இலங்கை வரலாற்றில் இரண்டு மாவட்ட பாடசாலைகள் கலந்து கொள்ளும் ஒரேயொரு மாபெரும் போட்டி என்ற பெருமையையும் இது பெறுகிறது.

கிழக்கு மாகாணத்தில் முதன்முதலாக நடைபெறுகின்ற போட்டியாகவும் இது அமைகிறது. இந்த இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகள் இரண்டிற்குமிடையில் ஒரு புரிந்துணர்வையும், நட்புரீதியான பரஸ்பர உறவையும் கட்டி எழுப்புவதன் மூலம் இவ்விரு மாவட்டங்களுக்குமிடையில் ஒரு நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கில் முன்னாள் அதிபர்களான மதிப்பிற்குரிய திரு.சி.தண்டாயுதபாணி, மதிப்பிற்குரிய திரு.கோ.விஜயரெத்தினம் ஆகியோரால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இப்போட்டியானது இன்றுவரை சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதற்கு இரு பாடசாலைகளினதும் அதிபர்கள், உபஅதிபர்கள், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், மற்றும் நலன்விரும்பிகள் அனைவரினதும் ஒத்துழைப்பு மிகச்சிறப்பான அளவில் இரு பாடசாலைகளுக்கும் கிடைத்துவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் ஜனாப் பசீர் அமீர் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழும் அவரது வழிநடத்தலின் கீழுமே இப்போட்டிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். இவ் இரண்டு பாடசாலைகளின் கொடிகளில் பொதுவாகக் காணப்படும் மஞ்சள் நிறத்தைக் கருத்திற் கொண்டே இப்போட்டிக்கான பெயரான "The Ballte of the Gold" எனும் பெயர் ஜனாப் பசீர் அமீர் அவர்களாலே சூட்டப்பட்டது என்பது எம் எல்லோருக்கும் பெருமையே.

இதுவரை நடந்து முடிந்த பதினெட்டுப் போட்டிகளில் எமது பாடசாலை அணி பதினொரு தடவைகளும், சிவானந்தா வித்தியாலய அணி ஏழு தடவைகளும் வெற்றி பெற்றுள்ளது. அதிலும், தொடர்ச்சியாக 1999, 2000, 2001ம் ஆண்டுகளிலும், பின்னர் 2003, 2004, 2005ம் ஆண்டுகளிலும் வெற்றி பெற்றதன் மூலம் 'சணசதுர்க்கா' சவால் கிண்ணத்தையும், 'விபுலானந்தா' சவால் கிண்ணத்தையும் எமது பாடசாலை அணி கைப்பற்றியது தனிச்சிறப்பு.

அதிலும், 2006ம் ஆண்டு எமது பாடசாலைக்கும், திருமலை மண்ணிற்கும் ஒரு சோகமான ஆண்டாக அமைந்திருந்ததனால் போட்டிகள் நடத்த முடியாமல் போயிருந்த போதிலும் 2007ம் ஆண்டு நடாத்தப்பட்ட போட்டியிலும் எமது பாடசாலை அணி வெற்றிபெற்று தொடர்ச்சியாக நடைபெற்ற நான்காவது போட்டியிலும் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இதுவரை மட்டக்களப்பு மண்ணில் ஒன்பது போட்டிகளும், திருமலை மண்ணில் ஒன்பது போட்டிகளும் நடைபெற்றுள்ளன. இதில் மட்டக்களப்பு மண்ணில் எமது பாடசாலை அணியினர் நான்கு தடவைகளும், எமது மண்ணில் சிவானந்தா வித்தியாலய அணியினர் இரண்டு தடவைகளும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்து இரண்டு வருடங்கள் எமது பாடசாலை அணியினர் தொடர்ச்சியான இரண்டு தோல்விகளைச் சந்தித்திருப்பது சற்று கவலைக்குரிய விடயம் எனினும், 'வீழ்வது எழுவதற்கே' என்பதை எமது பாடசாலை அணியினர் உணர்ந்து அடுத்த போட்டியில் வீறுகொண்டு எழுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அதற்கு எமது பழைய மாணவர் சங்கம் தன்னாலான அனைத்து உதவிகளையும் செய்துதரும் என்று நாம் உறுதியளிக்கிறோம். மேலும் எமது பாடசாலை அணியினர் பல வெற்றிகளையும் பெறுவதற்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இ.அசோக் - ப.மா.ச. உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தி/இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா கிளையினரின் ஒன்று கூடல் நிகழ்வு.

தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஒன்று கூடல் நிகழ்வு 9.7.2011ம் திகதி வைபவரீதியாக நிகழவிருப்பதையிட்டு தாய் சங்கமாகிய ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் தனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியைக் காண்கின்றது.

இவ்வாறான ஒன்று கூடல் நிகழ்வு ஆக்கபூர்வமான, ஆரோக்கியமான விளைபயன்களை விட்டுச்செல்லும் என்பது உறுதியே. ஓர் முன்மாதிரியாக திகழும் கனடா பழைய மாணவர் சங்கம் இப்பயன்மிகு முன்மொழிவுகளை மேற்கொண்டு இந்நிகழ்வினை முன்னெடுத்திருப்பது என்றென்றும் பாராட்டுதலுக்குரியதே. இந்நிகழ்வில் எமது தாய்சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் விழாநாயகனாக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படுவது கனடா பழைய மாணவர் சங்கத்தின் உயர் பண்புகளின் ஓர் வெளிப்படுகையாகவே நான் கருதுகின்றேன்.இவ்வாறு வெளிப்பட்டு மேலெழுந்து செல்லும் அவர்களின் உயரிய பண்புகள் அறவியல் கலந்த அறிவியலின் ஒரு வெளிப்பாடாகவே பரிணமித்து நிற்கின்றது.

ஒருவரின் பெருமைக்கும், சிறுமைக்கும் அவரவர் எண்ணங்களே வழிகோலுகின்றது.இப்பெருமைக்குரிய நிகழ்வு உங்களின்பாலிருந்து உதயம் பெறுவது மனமகிழ்வினைத் தருகின்றது. உயர்ந்த பண்புகள் எண்ணங்கள் ஒருவருக்கும் ஊறு விளைவிப்பதில்லை என்பது உண்மையே. வாழ்க வளமுடன் வளர்க நற்பணி என எல்லாம் வல்ல கோணநாதப் பெருமானை நினைந்து பணிந்து வாழ்த்தி அமைகிறேன்.

நன்றி.

ச.பாரதிநாதன் - இதழ் ஆசிரியர்.



## பழைய மாணவர் தினம் - யூன் 30

எமது கல்லூரி தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பல்வேறு வகை வளர்ச்சிப் பாதையில் பாடசாலை சமூகமாக எமது பழைய மாணவர் சங்கமும் இணைந்து பணியாற்றுவது நாம் அறிந்ததே.

அந் நிலையில் கடந்த பல வருடங்களாக சிறப்புடன் செயலாற்றி வரும் எமது பழைய மாணவர் சங்கம், கடந்த 2004ம் ஆண்டு முதல் பழைய மாணவர்களுக்கான ஒன்று கூடும் தினமாக யூன் 30ம் நாளை பழைய மாணவர் தினமாக எமது கல்லூரியில் வருடாவருடம் கொண்டாடப்படுகின்றது.

இந் நிகழ்வின் மூலமாக பழைய மாணவர்கள் தம்மை உயர்வித்த கல்லூரியின் மீது அன்பையும் அக்கறையையும் வெளிக்காட்டுவதுடன் கல்லூரியின் நிழலில் எமது சிறு பராய கல்லூரி நாட்களை பசுமை நினைவுகளை மீட்டிக் கொள்வதற்கும் சந்தர்ப்பமாக அமைகின்றது. இத்தோடு மட்டுமல்லாது பரவிப் பிரிந்து பல்வேறு திசைகளில் தற்கால வாழ்க்கையை நாம் அமைத்துக் கொண்ட போதும் அன்றைய நாளில் எமது கல்லூரிக் கால தோழர்களை கண்டு கலந்துரையாடி மகிழ்வதற்கும் ஓர் சந்தர்ப்பமாக அமைகின்றது.

இவற்றிற்கு மேலாக, பல்வேறு துறைசார் பதவிகளில், தொழில்துறைகளில், வசதிகளில், பணியாற்றும் பழைய மாணவர்கள் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கான பல்வேறுபட்ட தேவைகளை இனம் கண்டு அவற்றினை நிறைவு செய்வதற்கு தம்மை இணைத்துக் கொள்ளும் நாளாகவும் இவ் பழைய மாணவர் தினம் அடையாளப்படுத்தப்படுகின்றது.

இத்தினத்தினை சிறப்பிக்கும் வகையில் தற்கால மாணவர்களை, ஆசிரியர்களை, பெற்றோர்களையும் இணைத்து அனைவருக்குமான உள்ளக, வெளியக விளையாட்டு போட்டிகள், இசை நிகழ்வுகள், விருந்து உபசாரம் எனவும் விரிந்து நிற்கின்றது.

அத்தோடு நின்றுவிடாது, எமது பழைய மாணவர்களாக அடையாளப்படுத்தப்பட்டு தமது திறன்சார், தொழில்சார், சமூகம்சார் உன்னத நிலையிலுள்ளோரை வருடா வருடம் கௌரவிப்பதிலும் இத்தினம் பெருமையடைகின்றது.

இத்தினமானது எமது ஊரில் மட்டுமல்லாது உலகெங்கும் பரந்து வாழும் எமது வாழ்நாள் உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு வருடா வருடம் கொண்டாடப்படுகின்றது.

விசேடமாக இத்தினத்தில் நாம் வாழ்நாள் உறுப்பினர்களாக கலந்து சிறப்பிப்பதோடு, மேலும் பல பழைய மாணவர்களை வாழ்நாள் உறுப்பினர்களாக இணைத்து கொண்டு பலம் பெறுவதோடு எமது கல்லூரியின் வளர்ச்சிப் பாதைக்கு என்றென்றும் எம்மால் ஆன ஆக்கபூர்வ பங்களிப்பினை வழங்குவோமாக.

இந்த வகையில் இந்நிகழ்வானது எங்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்புடனும், ஒற்றுமையுடனும் இணைந்து செயலாற்றி வெற்றி பெறுவதோடு, எதிர்வரும் காலங்களிலும் காலத்தின் தேவை அறிந்து பல்வேறு வகை விரிவாக்கத்துடன் செயலாற்ற தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களாக இணைந்து கொள்வோமாக.

நன்றி - நெஞ்சகலா நினைவுகளுடன் - ந.து.ரகுராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 8வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள்




*Best wishes on your OBA day*

**Hatton National Bank**

**Hatton National Bank**
**Trincomalee Branch**

*"Your Partner in Progress"*

*No. 59, Ahambaram Road, Trincomalee*
*Tel : 026 2222572, 026 2221092, 026 2222801*
*Fax : 026 2222610*
*E-mail : trinco@hnb.lk*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org